# சிறந்த விவசாயிகள் தெரிவு - 2019

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்து கௌரவிக்கும் திட்டத்தின் கீழ் இவ்வருடமும் சிறந்த விவசாயிகள் தெரிவு செய்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த விவசாயிகள் கௌரவிப்பானது மாகாண விவசாய அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழும் மாகாண விவசாயத்திணைக்களத்தின் மீண்டுவரும் செலவீனத்திற்கான ஒதுக்கீட்டின் கீழும் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மாகாண விவசாய அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் மற்றும் சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்கள் எனும் இரு வகுதிகளின் கீழ் போட்டி நடைபெறவுள்ளது.

மாகாண விவசாயத்திணைக்களத்தின் ஒதுக்கீட்டின் கீழ் மாவட்ட ரீதியாக சிறந்த விவசாயிகள் தெரிவிற்கான மாவட்டத்திற்குரிய இரு தலைப்புக்கள் தாய முறமையினைப் (Matrix Method) பிரயோகித்து சம்பந்தப்பட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக சிறந்த விவசாயிகள் தெரிவுக்காக தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்கள் கீழ் வருமாறு

| மாவட்டம் | தாய முறமையினைப் (Matrix Method) பிரயோகித்து சிறந்த விவசாயிகள் தெரிவுக்காக அடையாளம் காணப்பட்ட 02 தலைப்புக்கள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | • சிறந்த தேனீ வளர்ப்பாளர்<br>• சிறந்த விவசாயச் செயன்முறைத் தொழில்நுட்பங்களை மரக்கறிச் செய்கையில் நடைமுறைப்படுத்துபவர் |
| கிளிநொச்சி | • சொட்டு நீர்ப்பாசனத்துடனான சிறந்த வாழைச் செய்கையாளர்<br>• சிறந்த தேனீ வளர்ப்பாளர் |
| முல்லைத்தீவு | • அடர்முறையில் மாமரச் செய்கையில் சிறப்பாக ஈடுபடுபவர்<br>• சிறந்த தேனீ வளர்ப்பாளர் |
| மன்னார் | • நெருக்கமான முறையில் மாமரச்செய்கையில் சிறப்பாக ஈடுபடுபவர்<br>• சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர் |
| வவுனியா | • சிறந்த விவசாய முறைமையுடனான மரக்கறிச் செய்கையாளர்<br>• காலநிலை மாற்றத்திற்கேற்ப சிறந்த முறையில் பயிர்ச்செய்கை மேற்கொள்பவர் |

05 மாவட்டங்களிலும் இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய தலைப்புக்களின் கீழ் சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்யும் முறை**

தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு இவர்களினால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு விவசாயப் போதனாசிரியர் பிரிவு மட்டம் மற்றும் மாவட்ட மட்ட வெற்றியளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

முதற்கட்டத் தெரிவானது மாவட்டத்தின் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடாத்தப்பட்டு ஒவ்வொரு தலைப்புக்களின் கீழும் மூன்று சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டாம்கட்ட தெரிவானது ஒவ்வொரு தலைப்புக்களின் கீழும் விவசாயப் போதனாசிரியர் மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றவர்கள் மத்தியில் நடாத்தப்பட்டு மாவட்ட மட்டத்தில் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**பரிசளிப்பு**

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெறும் வெற்றியாளர்களிற்கு கீழ் வரும் அடிப்படையில் பணப்பரிசும், நினைவுக் கேடயம் மற்றும் சான்றிதழ் என்பனவும் வழங்கப்படும்.

1 ம் பரிசு - 15,000
2 ம் பரிசு - 12,500
3 ம் பரிசு - 10,000

விவசாயப் போதனாசிரியர் பிரிவு மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களிற்கு சான்றிதழ் வழங்கப்படும்.

சகல செய்கையாளர்களும் போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை சம்மந்தப்பட்ட விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் அல்லது மாவட்டக் காரியாலயத்தில் பெற்று போட்டி நிபந்தனைகளிற்கு அமைவாக போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

அந்தந்த மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்களுடன் தொடர்புகளினை மேற்கொள்வதற்குரிய தொலைபேசி இலக்கங்கள் கீழ்வருமாறு

| இல | மாவட்டம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 021 222 2175 |
| 2 | கிளிநொச்சி | 021 228 5726 |
| 3 | முல்லைத்தீவு | 021 229 0006 |
| 4 | மன்னார் | 023 222 2155 |
| 5 | வவுனியா | 024 222 2324 |

**மாகாண விவசாயப் பணிப்பாளர்**
**மாகாண விவசாயத் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**